அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைக் கடிதம் : 03/2014

எனது இல : EST-8/ALOWN/06/0719/25(V)G
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07

2014.07.09

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாணங்களின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**<u>ஒழுக்காற்று விசாரணைகளுக்கான கொடுப்பனவு</u>**

மேற்படி விடயம் தொடர்பில் 2011.11.22 ஆம் திகதிய 19/2005(i) ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின்பால் தங்களின் கவனம் இத்தால் ஈர்க்கப்படுகின்றது.

02. மேற்படி சுற்றறிக்கையின் 7 ஆம் பிரிவின்கீழ் விசாரணை அலுவலர்களுக்கான படிக் கொடுப்பனவு தொடர்பில் பல்வேறுபட்ட நிறுவனங்களின் மூலம் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. முறைசார்ந்த ஒழுக்காற்று விசாரணையை முடிவுறுத்தி ஒழுக்காற்று அதிகாரிக்கு அறிக்கையினைக் கையளிப்பதற்காக குறித்துரைக்கப்பட்ட 06 மாத காலத்திற்குள் நிகழ்ந்த அலுவலரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணம் ஒன்றினால் அறிக்கையைக் கையளிப்பதில் தாமதம் ஒன்று ஏற்பட்டும் அத்துடன் அத்தகைய சூழ்நிலையினை உறுதிப்படுத்துவது சாத்தியமுடையதாகவும் இருந்தால் ரூபா. 3000/- கொண்ட மேலதிகக் கொடுப்பனவானது எந்தவிதக் குறைப்புகளுமின்றி அவரிற்குச் செலுத்தப்பட முடியும். எனினும், எந்தவிதக் குறைப்புகளுமின்றி மேற்படி கொடுப்பனவினை மேற்கொள்ளும் போது ஒழுக்காற்று அதிகாரியானவர் அத்தகைய தீர்மானத்திற்கான காரணங்களை தெளிவாகச் சுட்டிக்காட்டுதல் வேண்டும் என இத்தால் அறியத்தரப்படுகின்றது.

ஒப்பம்/ பி.பீ. அபேகோன்
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு